பக்கங்கள்:-19

# காலை முரசு

**குற்றச் செயல்களில் ஈடுபட்ட**

## 85 சீனப் பிரஜைகள் நேற்று நாடு கடத்தல்

இலங்கையில் தங்கியிருந்து இணைய வழி மோசடி உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 07 | சனிக்கிழமை | 21.06.2025 | அதிர்வு 321

# நிலப் பறிப்பு வர்த்தமானி பற்றி பதில் தர அரசு கடைசி நேரம் வரை கால அவகாசம் கோருகிறது

### இந்தத் தயக்கம் குறித்து சந்தேகம் எழுப்புகின்றார் சுமந்திரன்

வடக்கிலுள்ள காணிகள் தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் குறித்து அரசின் முடிவை அறிவிப்பதற்கு எதிர்வரும் 27ஆம் திகதி வரை மீண்டும் கால அவகாசம் வழங்குமாறு உயர்நீதிமன்றத்திடம் சட்டமா அதிபர் கோரியிருக்கின்றமையைச் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தாம் தீர்மானித்திருப்பதாகக் கூறிய விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தயங்குவது ஏன் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் 07



# செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரி 3 நாள்கள் 'அணையா விளக்கு' போராட்டம்

## யாழ்.வரும் ஐ.நா. மனித உரிமை ஆணையரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நடத்த ஏற்பாடு

(எஸ்.நிதர்ஷன்)

**யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்குச் சர்வதேச நீதி கோரியும், சர்வதேச கண்காணிப்புடனான மனிதப் புதைகுழி அகழ்வை வலியுறுத்தியும் மக்கள் செயல் என்கின்ற தன்னார்வ இளையோர் அமைப்பால் எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரையில் செம்மணி வளைவுப் பகுதியில் வெகுசனப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.**

**இந்தப் போராட்டத்துக்கு 'அணையா விளக்கு' எனப் பெயரிடப்பட்டுள்ளது.** 07





# தமிழருக்குத் தீர்வு வழங்குவோம்!

### பிரதமர் ஹரிணி உறுதி

"தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும். புதிய அரசமைப்பின் ஊடாக அந்தத் தீர்வை வழங்குவோம்."

- இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அரசியல் தீர்வு விடயம் கருத்துரைக்கும்போதே 06






வடக்கில் பல உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்களை ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் தமிழரசுக் கட்சி கைப்பற்றி வருவதை நரித் தந்திர அரசியல் என்று அமைச்சர் சந்திரசேகர் பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்தார். நாடாளுமன்றத்திலும் பேசியிருந்தார். அவரிடம் ஒரு கேள்வி.

பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைக் கடுமையாக விமர்சித்து வந்தவர் நாட்டின் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

கிழக்கில் இப்போது அவரது தேசிய மக்கள் சக்தி, பிள்ளையானின் கட்சியோடு தோளில் கைபோட்டுக் கைகோர்த்து நிற்கின்றது. நேற்று வாகரையிலும் கூட அந்த அந்நியோன்னியம் அப்பட்டமாக வெளிப்பட்டது. இதனை – பிள்ளையானின் கட்சியோடு தேசிய மக்கள் கட்சி கைகோர்த்து இருப்பதை – அமைச்சர் சந்திரசேகரன் 'நரி தந்திரத்திற்கு' அப்பால் என்ன தந்திரம் என்று அடையாளப்படுத்தப் போகின்றார்? அவரிடம் இந்த கேள்வி. 06

# தேசபந்து தென்னக்கோன் சார்பில் 28 சாட்சியாளர்கள் சாட்சியமளிப்பு



பொலிஸ்மா அதிபர் ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னக்கோனால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துர்நடத்தை மற்றும் பதவித் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட குழு மேலும் 7 சாட்சியாளர்களின் சாட்சியங்களைப் பெறுவதற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கூடியது.

உயர்நீதிமன்ற நீதியரசர் பி.பி. சூரசேன அவர்களின் தலைமையில் மற்றும் நீதிபதி டபிள்யூ.எம்.என்.பி. இத்தவல மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஈ.டபிள்யூ.எம் லலித் ஏக்கநாயக்க ஆகியோர் உள்ளடங்கிய குழு கடந்த திங்கள் கிழமை முதல் தொடர்ந்து நான்காவது நாளாக நேற்றும் கூடியது.

அதற்கமைய, நேற்று முன்தினம் சாட்சி வழங்கிய 7 சாட்சியாளர்கள் உள்ளிட்ட வாதி சார்பில் 28 சாட்சியாளர்கள் குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு வருகை தந்துள்ளதுடன், வாதி சார்பில் மேலும் 2 சாட்சியாளர்களிடம் ஜூன் 26 ஆம் திகதியின் பின்னர் சாட்சிகள் பெற்றுக்கொள்ளவதற்கு விசாரணைக்குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

இந்த 2 சாட்சியாளர்களும் உத்தியோகபூர்வ பணிக்காக வெளிநாடு சென்றுள்ளதாகவும் ஜூன் 26 ஆம் திகதி மீண்டும் நாட்டுக்கு வருகை தரவுள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விசாரணையில் பங்கெடுத்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் (ஜனாதிபதி சட்டத்தரணி) திலீப பீரிஸ் மற்றும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ரஜித பெரேரா ஆகியோர் குழுவில் சுட்டிக்காட்டினர்.

அதற்கமைய பிரதிவாதியான பொலிஸ்மா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர்.எஸ். வீரவிக்ரமவின் இணக்கத்துடன், 26 ஆம் திகதிக்கு பின்னர் இந்த 2 சாட்சியாளர்களிடம் சாட்சிகளைப் பெறுவதற்கும் குறுக்கு விசாரணைகளை மேற்கொள்வதற்கும் குழு முன்னிலையில் அழைப்பதற்கு விசாரணைக்குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

விசாரணைக்குழு இன்றும் தொடர்ந்தும் கூடுவதற்கு திட்டமிட்டிருந்தாலும், பிரதிவாதியின் வழக்கு விசாரணைக்கு தயாராக வேண்டி உள்ளதால் பிரதிவாதியான பொலிஸ்மா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர்.எஸ். வீரவிக்கிரம 23 ஆம் திகதி வரை கால அவகாசம் தருமாறு கோரிக்கை விடுத்தார்.

இதன்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகளின் இணக்கத்துடன் அதற்கு விசாரணைக்குழு அனுமதி வழங்கியது.

அதற்கமைய, விசாரணைக்குழு 23 ஆம் திகதி திங்கள் கிழமை மீண்டும் கூடவுள்ளதுடன், அன்றைய தினம் முதல் 25ஆம் திகதி புதன்கிழமை வரை ஒவ்வொருநாளும் மு.ப. 9.30 மணிக்கு, பிரதிவாதியான பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் சார்பில் சாட்சியாளர்களிடம் சாட்சியங்களைப் பெறுக்கொள்வதற்கு விசாரணைக்குழு முன்னிலையில் அழைக்கப்படவுள்ளனர்.

# தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு போதைப்பொருள்கள் கடத்தல்

## விசாரணைகள் தீவிரம்

தமிழ்நாட்டின் சில பகுதிகளிலிருந்து இலங்கைக்குத் தொடர்ச்சியாகப் போதைப்பொருட்கள் கடத்தப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி, நாகை மாவட்டத்திலிருந்து இலங்கைக்குப் போதைப்பொருள்கள் கடத்தப்படுவதாகத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் எனக்கூறப்படும் நபரிடம் முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகப் போதைப்பொருள் தடுப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டிலிருந்தே சந்தேக நபர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த வருடம், குறித்த நபர் கஞ்சா போதைப்பொருளைக் கடத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 7 கிலோ ஹசீஸ் போதைப்பொருளுடன் கொழும்பில் நேற்று ஒருவர் சிக்கினார்!

கொழும்பு வடக்கு பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குகே கிடைத்த தகவலின்படி, மோதர லெல்லமா பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின் போது 7 கிலோகிராம் ஹஷிஷ்டன் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையின் போது, மேலும் 9 கிலோகிராம் ஹஷிஷ், பாடசாலை மாணவர்களுக்கு விற்கத் திட்டமிடப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாத்திரைகள் மற்றும் 750 கிராம் கேரள கஞ்சா என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும் போதைப்பொருளின் மொத்த மதிப்பு நூற்று 75 மில்லியன் ரூபாவுக்கு மேல் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தற்போது வெளிநாட்டில் இருக்கும் சக்திவாய்ந்த போதைப்பொருள் கடத்தல்காரரான புளூமெந்தல் ரவியின் ஆதரவாளர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் சந்தேகநபர் தடுப்பு உத்தரவின் அடிப்படையில் மேலும் விசாரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# சபாநாயகரை சந்தித்தார் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர்

இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஸன்டெல் எட்வின் ஷால்க், சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சந்தித்தார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டார்.


தென்னாப்பிரிக்காவுடன் 1994 ஆம் ஆண்டில் இலங்கை இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டதாகக் குறிப்பிட்ட சபாநாயகர், வர்த்தகம், சுற்றுலாத்துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தல் மற்றும் மக்களுக்கிடையிலான தொடர்புகளை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை இதன்போது சுட்டிக்காட்டினார்.

தென்னாபிரிக்காவின் நல்லிணக்க பொறிமுறையானது சமாதானம் தொடர்பில் உலகிற்கு முக்கியமான செய்தியை தெரிவிப்பதாகவும் சபாநாயகர் குறிப்பிட்டதுடன், இலங்கைக்கு தொடர்ந்து வழங்கிவரும் ஆதரவிற்கு தென்னாப்பிரிக்க அரசுக்கு நன்றியையும் தெரிவித்தார்.

தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஸன்டெல் எட்வின் ஷால்க், நல்லிணக்க வழிமுறைகளை மேம்படுத்தும் அதே வேளை, அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்ட தென்னாபிரிக்க அரசாங்கத்தின் தொடர்ச்சியான புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி முயற்சிகளை விளக்கினார்.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான நாடாளுமன்ற மற்றும் இருதரப்பு தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இலங்கை – தென்னாப்பிரிக்க நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தை மீண்டும் புதுப்பிப்பதன் முக்கியத்துவத்தையும் உயர் ஸ்தானிகர் வலியுறுத்தினார்.

அத்துடன், உயர்ஸ்தானிகருக்கும் சபாநாயகருக்கும் இடையிலான சுமுகமான கலந்துரையாடலில் பரஸ்பர ஆர்வமுள்ள பல விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.











# முதலீடுகளை ஈர்ப்பதற்கு புதிய வழிமுறையில் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானது

## ஜனாதிபதி தெரிவிப்பு

2024ஆம்வருடத்தின்முதல்காலாண்டுடன் ஒப்பிடுகையில், 2025ஆம் வருடத்தின் முதல் காலாண்டில் வெளிநாட்டு நேரடி முதலீட்டை 96 மில்லியன் டொலர்களால் அதிகரிக்க இலங்கை முதலீட்டுச் சபைக்கு முடிந்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இலங்கை முதலீட்டு சபையின் முன்னேற்ற மீளாய்வின் போதே இது பற்றி தெரிவிக்கப்பட்டது.

மேலும், 2024 ஆம் வருடத்தின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் வருடத்தின் முதல் காலாண்டில், உள்நாட்டு முதலீடுகள் 21 மில்லியன் டொலர்களாலும், ஏற்றுமதி வருமானம் 176 மில்லியன் டொலர்களாலும் அதிகரித்துள்ளதுடன், 2025ஆம் ஆண்டின் இது வரை, இலங்கைக்கு 4669 மில்லியன் டொலர் பெறுமதியான முதலீட்டு முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதாகவும் முதலீட்டு சபையின் அதிகாரிகள் இங்கு சுட்டிக்காட்டினர்.

இலங்கைக்கு முதலீடுகளை ஈர்ப்பதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சவால்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகள் குறித்தும் இந்த கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நாட்டின் பொருளாதாரம் மற்றும் கிராமிய வாழ்க்கையை மேம்படுத்தும் பணியின் பெரும் பகுதி இலங்கை முதலீட்டுச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

பாரம்பரிய முதலீட்டுத் துறைகளில் முதலீடுகளை ஈர்க்கும் திறன் வரையறுக்கப்பட்டுள்ளதாவும், ஒரு நாடாக புதிய முதலீட்டுத் துறைகளை இனங்காண வேண்டும் என்றும், அதற்கான பொறுப்பு முதலீட்டு சபைக்கு வழங்கப்பட்டுள்ளதாவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு, 1978 ஆம் ஆண்டு முதல் இதுவரை சுமார் 22 பில்லியன் டொலர் முதலீடுகளை ஈட்டவே முடிந்துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கை வேகமாக முன்னேற வேண்டியுள்ளதுடன், வியட்நாம் 2022 இல் மாத்திரம் 23 பில்லியன் டொலர் முதலீட்டு இலக்கை எட்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

முதலீடுகளை ஈர்க்கும் போது, சேவைத் துறையில் முதலீடுகளை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும், தவறவிட்ட வாய்ப்புகளைப் பின் தொடர்வதைத் தாண்டி, புதிய முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறிவதே முதலீட்டு சபையின் நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, முதலீட்டு சபையின் தலைவர் அர்ஜுன ஹேரத் மற்றும் முதலீட்டு சபையின் பதில் பணிப்பாளர் நாயகம் ரேணுகா வீரகோன் உட்பட முதலீட்டு சபையின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.





# காட்டு யானைப் பிரச்சினையைத் தீர்க்க மாவட்ட அளவில் குழு நியமிக்கப்படும்

## ஜனாதிபதி பணிப்புரை

கிராமிய பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்க்கைக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் காட்டு யானைகளின் பிரச்சினையை தீர்ப்பதற்கான முறையான பொறிமுறையை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

காட்டு யானைப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

காட்டு யானைகளின் பிரச்சினை அதிகமாக உள்ள அநுராதபுரம், புத்தளம், பொலன்னறுவை, அம்பாறை, ஹம்பாந்தோட்டை, மொனராகலை, குருநாகல், பதுளை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், இது தொடர்பாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிரச்சினைகள் குறித்து மாவட்ட செயலாளர்களால் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், வனஜீவராசிகள் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்கள், வாகனத் தேவைகள் மற்றும் கடமைகளை முன்னெடுப்பதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

காட்டு யானைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பொறிமுறையை மேலும் வினைத்திறனாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, மக்களுடன் இணைந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, அடுத்த மாதத்திற்குள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அந்தந்த மாவட்டங்களில் இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அடங்கிய குழுக்களை நியமிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

வனஜீவராசிகள் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளுமாறும் பணிப்புரை வழங்கிய ஜனாதிபதி, இதன் துரித நடவடிக்கையாக சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை குறித்த பயிற்சிகளுடன் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு இணைத்துக்கொள்வதற்கும், அதற்கான சட்டங்களை உருவாக்குமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

காட்டு யானைகளின் பிரச்சினைக்கு தீர்வு காண, பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் வனஜீவராசிகள்



திணைக்களம் இணைந்து மேற்கொள்ளும் செயற்பாடுகளை முறைமைப்படுத்தவும் வினைத்திறன் மிக்கதாகவும் மாற்றுமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இந்நிகழ்வில், பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன, பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி.சரத், பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் ரஞ்சன் மாரசிங்க, இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் மாவட்ட செயலாளர்கள் உட்பட அரச அதிகாரிகள் குழுவும் கலந்துகொண்டனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசில் சுமந்திரன் எதிர்ப்புப் பிலாக்கணம் வைப்பதற்காக, வேறு பொருத்தமான விடயங்கள் சரிப்பட்டு வராமையால், வடக்கில் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஈ.பி.டி.பியின் ஆதரவை பெற்றது தவறு என்று துள்ளிக் குதிக்கும் தீவகப் பிரகிருதிகளும், கிளிநொச்சி ஜமீனும் கடைசியாக என்ன செய்திருக்கிறார்கள் என்பது வேடிக்கையானது.

ஈ.பி.டி.பியின் ஆதரவைக் கால் வாருகிறோம் என்று பிரலாபம் பண்ணிக் கொண்டு, அதன் மூலம் ஊர்காவற்றுறையில் தமிழரசுக் கட்சிக்கு கிடைக்கக் கூடிய பிரதேச சபைத் தலைவர் பதவியை, தமிழரசின் ஓர் உறுப்பினரைக் காலை வார வைத்து, வெட்டி வீழ்த்தி, சைக்கிள் கட்சியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அன்னலிங்கம் அன்னராசாவுக்கு பெற்றுக் கொடுக்கும் கைங்கரியத்தை இளம்பிறையன் – சின்ன ஜமீன் கூட்டு வெற்றிகரமாக ஒப்பேற்றியிருக்கின்றது.

ஆனால் இதிலும் கூட, தெரிந்தோ, தெரியாமலோ சுமந்திரனுக்குத்தான் வழமை போல இந்தக் ஜமீன் கூட்டு வெற்றி பெற்றுக் கொடுத்திருக்கின்றது என்பதுதான் இதற்குள் புதைந்து கிடக்கும் வேடிக்கை.

இந்த அன்னராசாவை தமிழரசுக் கட்சி ஊர்காவற்றுறையில் தன் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று ஒற்றை காலில் நின்றவர் சுமந்திரன். அதற்காகக் கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துடனும் முரண்டு பிடித்தவர் அவர். அன்னராசாவை பிரதேச சபைத் தலைவராக்கும் திட்டம் சுமந்திரனிடம் இருந்தது. இருவருக்கும் இடையில் நல்ல 'கெமிஸ்ட்ரி'யும் இருந்தது.

மீனவர் பிரச்சினைகள் தொடர்பாக வெளிப்படையாக ஆழமான கருத்துகளைக் கூறிக் காத்திரமாகச் செயற்பட்டு வரும் அன்னராசாவைக் தமிழரசுக்குள் கொண்டுவரும் நடவடிக்கையை ஆறு மாதங்களுக்கு முன்னரே சுமந்திரன் தரப்பு ஆரம்பித்திருந்தது என்பதை நான் நன்கு அறிந்திருந்தேன்.

ஆனால், அதற்கு இடம் கொடுக்க முடியாது,அவருக்குஇடம்அளிக்கக்கூடாது என்று துள்ளிக் குதித்து கடும் தீவிர நிலைப்பாட்டை எடுத்து, அவருக்கு கொடுக்க இருந்த வட்டார வேட்பு மனுவை பறித்தவர்கள் இந்த சின்ன ஜமீனும் இளம்பிறையினும்தான். தீவகத்தில் அவர்களின் விருப்புக்கும் ஈடுபாட்டுக்கு இடம் கொடுக்க வேண்டும் என் கட்சித் தலைவர் சி.வி.கே. கருதியமையினால் அன்னராசாவுக்கு இடமளிக்கும் தீர்மானத்தை தமிழரசு எடுப்பது கால தாமதமானது. அந்தத் தாமதத்தை அறிந்து அன்னராசாவை வசமாகப் பற்றிக் கொண்டது சைக்கிள் தரப்பு.

இப்படி அன்னராசாவைத் தமிழரசில் சேர்க்காமல் விட்டது சுமந்திரனுக்கு பெரிதும் மன வருத்தம். அது அன்னராசாவுக்கும் கூட நன்கு தெரியும்.

அவர் சுமந்திரனின் பரிந்துரையில் தமிழரசு வேட்பாளராக வருகிறார் என்பதற்காக மட்டுமே அவரை எதிர்த்த சின்ன ஜமீனும் இளம்பிறையனும், இப்போது சுமந்திரன் எதிர்ப்புப் பிலாக்கணத்திற்காக அதே அன்னராசாவை அதே தேர்தலின் வெளிப்பாடாக பிரதேச சபைத் தலைவராக்கி இருக்கிறார்கள். அந்த வகையில் பார்த்தால் சுமந்திரன் நினைத்ததைத் தான் இந்தக் கூட்டு தங்களை யறியாமல் – அல்லது தங்களையும் மீறி – ஒப்பேற்றியிருக்கின்றது.

சின்ன ஜமீன் – இளம்பிறையன் கூட்டின் சின்னத்தனமான அரசியல் இது.

இளம்பிறையன் அண்ட் கோவின் மிரட்டலில் அடங்கிப்போன தீவக உள்ளூராட்சி சபை உறுப்பினர் மீது மட்டும் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கை பாயும் என்பது அல்ல. அது அந்த உறுப்பினரை அச்சுறுத்திய தீவகப் பிரகிருதிகள் மீதும் பாயும் என்று தெரிகிறது. ஏற்கனவே ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலின் போது கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக இளம்பிறையன் போன்றோரிடம் விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டு இருந்தது. உரிய காலம் தாண்டியும் பதில் வராத காரணத்தினால் அவர்களிடம் பதில் கூற எதுவும் இல்லை என்று கட்சி தீர்மானித்திருப்பதான அறிவித்தல் இப்போது அவர்களுக்குப் போகின்றது. ஒழுக்காற்று நடவடிக்கை அடுத்த கட்டத்துக்கு போகும் போது ஏற்கனவே கட்சியில் இருந்து வெளியே போய்விட்ட ஜனாதிபதி சட்டத்தரணி, ஊடக முதலாளி போன்றோரின் நிலை இவர்களுக்கும் விரைந்து வரும் என்றே தோன்றுகின்றது.

இப்படி நான் எழுதுவதற்காக என் மீது கோபப்பட்டு அர்த்தமில்லை. சோதிடர் கிரக நிலை பார்த்து ஆரூடம் சொல்வது போல நான் கட்சி பிரமுகர்களின் நிலைப்பாடுகளை அறிந்து அவ்வப்போது சில விடயங்களை கணித்துக் கூறுகிறேன். அவற்றில் பலவும் அப்படியே நடைபெற்று வருகின்றமையை வாசகர்கள் அறிவார்கள். அத்தகைய ஆரூடத்தைத் தான் முன் வைத்திருக்கிறேன். அவ்வளவே.

தமிழரசில் வெளியாள்களின் அழுத்தத்திற்கு உள்ளாகும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் கட்சியின் முடிவுக்கு மாறாக நடந்தால் செமத்தியான நடவடிக்கைகள் நிச்சயம் என்பது பெரும்பாலும் தெளிவாகியுள்ளது. ஏனென்றால் சுமார் பத்து ஆண்டுகளாக கட்சிக்குள் எல்லா குசும்புகளையும் பார்த்து வாளாவிருந்த மாவையின் தலைமைத்துவம் காலாவதியாகிக் கடந்து மலையேறி விட்டது. இப்போது நிலைமை அதுவல்ல.

*  *  *

தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவரை நேற்று சந்தித்தேன். அவரது கைத்தொலைபேசியில் நேற்றைய 'காலை முரசு' பத்திரிகையின் ஒரு பக்கம் 'ஸ்க்ரீன் ஷொட்' எடுத்து வைத்திருப்பதை அவதானித்தேன். அது பற்றிக் கேட்டேன்.

கரைச்சி பிரதேச சபை தலைவரான தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த வேழமாலிகிதன் சபையின் உப தவிசாளரையும் மற்றும் உறுப்பினர்களையும் கூட்டிக் கொண்டு சபையின் விடயங்கள் குறித்துப் பேசுவதற்காக வடக்கு ஆளுநரை சந்தித்த விவகாரம் அந்தப் பக்கத்தில் படங்களுடன் வெளியாகி இருந்தது.

தமிழரசுக் கட்சிக்கு எதிராக நாடாளுமன்றத் தேர்தலில் கிளிநொச்சியிலிருந்து போட்டியிட்டமைக்காக கட்சியிலிருந்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, விலக்கப்பட்ட ஒருவரும் ஆளுநரைச் சந்தித்த அந்தப் பிரதேச சபை அணியில் முக்கிய இடத்தில் இருந்தார். அவர் இம்முறையும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் கரைச்சி பிரதேச சபையில் தமிழரசுக்கு எதிராகப் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்தவர். ஆனால் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையால் தேர்தலில் போட்டியிட முடியாமல் போனவர்.

அவரையும் கூட்டிக் கொண்டு பிரதேச சபை விடயம் குறித்து ஆளுநருடன் பேசுவதற்கு பிரதேச சபை தலைவர் வேழமாலிகிதன் சென்ற விடயம்தான் விவகாரமாகியிருக்கின்றது. கருப்பாடு என்று கட்சியினால் வெளியேற்றப்பட்ட வரை முக்கியத்துவம் கொடுத்து கட்சி செயற்பாட்டோடு இணைத்து இயக்குவது குறித்து பிரதேச சபைத் தலைவரிடம் விளக்கம் கோரப்படும் எனத் தெரிகிறது.

ஏற்கனவே ஊடக சந்திப்பு வைத்து, கட்சிச் செயலாளரிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டமை மாத்திரம் அன்றி, எழுத்திலும் அதை உறுதி மொழியாகக் கொடுத்தே வேழமாலிகிதன் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டார் என்பது மறக்க கூடியது அல்ல. கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் விளக்கம் கேட்காமல் தன்னைக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கு இணங்குகின்றார் என்ற சாரப்பட அந்த மன்னிப்புக் கடிதத்தில் எழுதிக் கொடுத்து விட்டுத்தான், இப்போது கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட கருப்பு ஆட்டை பகிரங்கமாக கூட்டிக்கொண்டு ஆளுநரிடம் செல்லுகின்ற அளவுக்கு அரசியல் செய்கின்றார் வேழமாலிகிதன். இது எந்த நேரத்திலும் ஒழுங்காற்று நடவடிக்கை பாயும் சூழலை ஏற்படுத்தி உள்ளது.

உள்ளூராட்சி சபை நிர்வாகங்களைத் தேர்வு செய்யும் நடவடிக்கைகள் நாளை பிறக்கும் புதிய வாரத்தோடு முடிவுக்கு வந்துவிடும்.

அதற்குப் பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்ற பெயரில் தொடரக் கூடிய செயற்பாடுகள் எங்களுக்கு செய்திக்குப் பஞ்சம் இல்லாத நிலைமையை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன்.

---

## தமிழருக்குத் தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்குத் தமிழ் மக்களும் ஆணை வழங்கியுள்ளார்கள். எமது ஜனாதிபதி மீதும், எமது அரசு மீதும் தமிழ் மக்கள் வைத்த நம்பிக்கையை நாம் வீணடிக்க மாட்டோம்.

வடக்கு, கிழக்குக்கு நாம் விஜயம் செய்யும் ஒவ்வொரு தடவையும் அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளுடன் எம்முடன் பேசுவார்கள். எனவே, அவர்களின் எதிர்பார்ப்பை நாம் நிறைவேற்றியே தீருவோம்." – என்றார்.

---

## 85 சீனப் பிரஜைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைக்கப்பட்டிருந்த 85 சீனப் பிரஜைகள் சீனாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

85 சீனப் பிரஜைகளும் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 1.20 மணியளவில் ஸ்ரீலங்கன் விமான சேவையின் யு.எல் - 880 விமானம் ஊடாக சீனாவின் குவாங்சோ நகரத்துக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 85 சீனப் பிரஜைகளும் நாடு கடத்தப்படுவதற்காக வெலிசறை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் தடுப்பு நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று சீனாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

சீனப் பிரஜைகளுடன் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் விமான நிலையப் பாதுகாப்புப் பிரிவினர் உட்பட சுமார் 172 அதிகாரிகள் சீனாவுக்குப் புறப்பட்டுள்ளனர்.

# 2 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான போதைப்பொருள்களுடன் ஒருவர் கைது!

இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஹெரோயின் மற்றும் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள்களுடன் சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் ராகமை பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த காரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ராகமை பிரதேசத்தில் வசிக்கும் 40 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிலோ 738 கிராம் ஹெரோயினும், 504 கிராம் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள்களும், கார் ஒன்றும், 2 கையடக்கத் தொலைபேசிகளும் பொலிஸ் அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்கள் 2 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியானவை எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக ராகமை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ராகமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நிலப் பறிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்தமாக 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் சட்ட ரீதியான ஆதாரங்கள், ஆவணங்களுடன் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அரசின் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2430/25 எனும் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும் அந்த வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக வாபஸ் பெற வேண்டும் எனக் கோரி வலுப்பெற்ற எதிர்ப்பை அடுத்து, அந்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கு அரசு தீர்மானித்திருப்பதாக அரசு சார்பில் ஊடக அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அதனை இரத்துச் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் தற்போது வரை வெளியிடப்படவில்லை.

அதேபோன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்ப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது காணி அமைச்சர் லால்காந்தவினால் வாக்குறுதி அளிக்கப்பட்டவாறு கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது இந்த விவகாரம் பற்றி எந்தவொரு விசேட கூற்றும் வெளியிடப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த விவகாரம் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் கடந்த 12 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவில், அது குறித்த விசாரணைகள் முடிவடைந்து இறுதித் தீர்ப்பு வழங்கப்படும் வரை வடக்கிலுள்ள காணிகள் தொடர்பில் வெளியிடப்பட்ட 2430/25 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இடைக்காலத் தடை விதிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு கடந்த செவ்வாய்க் கிழமை உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அது குறித்து அமைச்சரவையின் கருத்தைக் கேட்டறிந்து சொல்வதற்காக நேற்று வெள்ளிக்கிழமை வரை சட்டமா அதிபர் தரப்பு கால அவகாசம் கோரியிருந்தது.

நேற்று இந்த வழக்கு உயர்நீதிமன்ற நீதியரசர்கள் துரைராஜா, சோபித ராஜகருண, சம்பத் விஜேரத்ன ஆகியோர் முன்னிலையில் எடுக்கப்பட்டபோது, கடந்த செவ்வாய்க்கிழமை வழக்குத் தவணைக்குப் பின்னர் அமைச்சரவை இன்னும் கூடவில்லை என்றும், ஆகையினால் வர்த்தமானி அறிவித்தல் குறித்து அமைச்சரவையின் முடிவை அறிந்து தெரிவிப்பதற்கு எதிர்வரும் 27 ஆம் திகதி வரை மீண்டும் கால அவகாசம் வழங்குமாறும் சட்டமா அதிபர் தரப்பு கோரியது.

அதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. மேற்படி வர்த்தமானி அறிவித்தலின்படி காணி சுவீகரிப்புக்கான கால நிர்ணயம், அந்த வர்த்தமானி வெளியாகி சரியாக மூன்று மாதங்களில் – ஜுன் 29 ஆம் திகதி – சட்ட ரீதியாக அரசுக்கு வரவிருக்கின்றது. அதற்குச் சரியாக முதல் நாள் வரை அரசு இப்போது நீதிமன்றத்தில் கால அவகாசம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இது பற்றி தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன், அதில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“வடக்கில் 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளுக்கான தமது உரித்தை நிரூபிக்குமாறு காணி நிர்ணயச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 28.03.2025 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம், காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் இம்மாதம் 28 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

அந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் எதிர்ப்பை வெளிப்படுத்தி சட்ட மறுப்புப் போராட்டத்தை நடத்துவது குறித்து நாம் வழங்கிய காலக்கெடு முடிவடைவதற்கு ஒருநாள் இருக்கையில், அதனை மீளப்பெறப் போவதாகக் கடந்த மாதம் 27 ஆம் திகதி அரசு அறிவித்தது. அந்த வாக்குறுதி உடனடியாக நிறைவேற்றப்படும் என நாம் எதிர்பார்த்தோம்.

ஆனால் இரண்டு வாரங்கள் கடந்தும் இந்த வர்த்தமானி அறிவித்தல் இரத்துச் செய்யப்படாததன் காரணமாக, அது குறித்து கடந்த 12 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்தேன்.

கடந்த செவ்வாயன்று இந்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அமைச்சரவையின் அறிவுறுத்தல் பெறுவதற்குச் சட்டமா அதிபர் இன்று வரை (நேற்று) கால அவகாசம் கோரியிருந்தார்.

அதனையடுத்து இன்று (நேற்று) வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அரசின் முடிவை அறிவிப்பதற்கு எதிர்வரும் 27 ஆம் திகதி வரை சட்டமா அதிபர் மீண்டும் கால அவகாசம் கோரியிருக்கின்றார். இது மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலக்கெடு முடிவடைவதற்கு ஒரு நாள் அவகாசத்தை மாத்திரமே கொண்டிருக்கின்றது. அவ்வாறெனில், இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தாம் தீர்மானித்திருப்பதாகக் கூறியதை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தயங்குவது ஏன்?” – என்று ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

## செம்மணி மனிதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழர்களது பண்பாட்டில் நம்பிக்கை சார்ந்த மரபாக இருக்கின்ற அணையா விளக்கை முன்னிலைப்படுத்தியே இந்தப் போராட்டம் ஏற்பாட்டாளர்களால் நடத்தப்படவுள்ளது.

1995ஆம் ஆண்டிலிருந்து 2025ஆம் ஆண்டு வரையில் செம்மணிப் பகுதியில் பல்வேறு இடங்களிலும் மனிதப் புதைகுழிகள் அகழப்பட்டுள்ள போதிலும், அது குறித்த மர்மம் இருள் சூழ்ந்ததாகவே காணப்படுகின்றது.

இனவழிப்புக்கு ஆதாரமான இந்தக் குற்றச் செயல்களுக்கான காரணமோ, இதற்கு அதிகாரம் வழங்கிய தரப்புக்கள் யார் என்பதோ, மீளவும் இதுபோன்ற மனிதப் புதைகுழிகள் உருவாக்கப்படாது என்பதற்கான பொறுப்புக்கூறலோ வெளிப்படுத்தப்படவில்லை.

எனவே, இருள் சூழ்ந்திருக்கும் செம்மணி மனிதப் புதைகுழி விடயத்துக்கு ஒளி பாய்ச்சப்படல் வேண்டும் என்கின்ற குறியீட்டு அர்த்தத்தில் இந்தப் போராட்டத்தில் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் எரியக்கூடிய அணையா விளக்கு ஏற்றப்படவுள்ளது.

போராட்டம் இடம்பெறும் மூன்று தினங்களில், முதல் இரண்டு நாள்களிலும் சுழற்சி முறையிலான அடையாள உண்ணாவிரதமும், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான செய்திப் படக் கண்காட்சியும், மக்கள் கையெழுத்துத் திரட்டலும், செம்மணி மனிதப் புதைகுழியோடு தொடர்புபட்ட கதை, கவிதை படிப்பும், நாடக அளிக்கையும் இடம்பெறவுள்ளன.

25ஆம் திகதி – மூன்றாம் நாள் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

போராட்டத்தின் இறுதி நாளன்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர்வோல்கர்டர்க்யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ள நிலையில் அவரது கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

செம்மணி மாத்திரமல்லாது வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து மனிதப் புதைகுழிகள் தொடர்பிலும் சர்வதேச கவனத்தை ஈர்க்கும் முகமாக இடம்பெறும் இந்தப் போராட்டத்தில் அதிகளவில் பொது மக்களை இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



# ஐ.நா. உயர்ஸ்தானிகர் இலங்கைக்கு விஜயம்

## வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியது

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் மூன்று நாள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வரவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, அவர் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டுக்கு பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் ஒருவர் நாட்டுக்கு விஜயம் மேற்கொள்வது இதுவே முதற்தடவையாகும்.

இந்த விஜயத்தின் போது அவர், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை சந்திக்கவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், வெளிநாட்டு அமைச்சர், சுற்றுலா அமைச்சர் மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவர் சந்திப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் மற்றுமொரு பகுதியாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் புனித தலதா மாளிகை, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைக்கும் பயணிக்கவுள்ளார் என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.





# ஓமந்தை விபத்தில் காயமடைந்த மூன்றாவது நபரும் உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

கடந்த மாதம் 26 ஆம் திகதி ஓமந்தைப் பகுதியில் டிப்பர் வாகனத்துடன் கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயம் அடைந்திருந்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து இவ் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

இந்தியாவுக்கு தல யாத்திரை மேற்கொண்டு விட்டு யாழ்ப்பாண நோக்கி கார் ஒன்றில் திரும்பிக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் கலாச்சார உத்தியோதராக கடமை ஆற்றி வந்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அதன் பின்னர் அவரது மகனும் உயிரிழந்தார்.

இதில் படுகாயம் அடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொழும்பு 15 ஐ சேர்ந்த துரைச்சாமிக்குருக்கள் சுவாமிநாத ஐயர் (வயது 69) என்பவர் நேற்று (20) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவ் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்துள்ளது.

மேலும் பெண் ஒருவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை ஓமந்தை பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பேரினத்தின் பரவணிப் பண்பு

ஒரு நாட்டில் மிகவும் உயர்ந்த சட்டம் - சட்டங்களுக்கு எல்லாம் மேலான சட்டம் - நாட்டின் அரசமைப்புச் சட்டம்தான்.

நாட்டின், அரசின் முறைமைகள், அரசியல் கொள்கைகள், அமைப்பு, செயல்முறை, அதிகாரம், கடமை, சட்ட வரையறை, சட்டத்தின் ஆட்சி பற்றியவை எல்லாவற்றையும் உரைப்பது இந்த அரசியல் சட்டம்தான்.

நாட்டின் மற்ற எல்லாச் சட்டங்களும் இந்த அரசமைப்புச் சட்டத்திற்கு அமைவாகவே இருக்க வேண்டும். நாட்டின் சட்ட அமைப்புக்கு அடித்தளமே அதுதான்.

ஆனால், அத்தகைய அரசமைப்புச் சட்டத்தில் இருக்கும் ஏற்பாடுகளையே நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று அரசமைப்புக்கு எதிராக ஒற்றைக் காலில் நின்று பிடிவாதம் பிடிக்கும் தரப்புக்கள், நாட்டின் அரசமைப்பு ரீதியான - சட்டரீதியான - அரசுகளாகத் தங்களை வெளிக்காட்டும் கபட நாடகம் இலங்கையில் மட்டும்தான் அரங்கேறுகின்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 13 ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. அது அரசமைப்பின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டு 37 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனாலும் அந்த அரசமைப்புச் சட்டத்தில் இருக்கின்ற அந்த விடயங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று பகிரங்கமாக அறிவித்து, நாட்டின் அரசமைப்பையே உதாசீனப்படுத்தி புறமொதுக்கும் ஆட்சித் தரப்பு, சட்டரீதியான அரசாக இலங்கையில் நீடிப்பது நாட்டின் ஆட்சி முறையைப் பொறுத்தவரை கேவலத்திலும் கேவலம். நாட்டில் சட்டவாட்சியை காலில் போட்டு மிதிக்கும் தேசத்துரோகம்.

அரசமைப்பு ஏற்பாடுகளையே வெளிப்படையாகவே தூக்கிக் கடாசி, நிராகரிக்கும் துணிச்சல் அல்லது அந்த அடாவடிப் போக்கை நியாயப்படுத்தும் பண்பு இந்த நாட்டில் பௌத்த - சிங்களப் பேரினவாக மேலாதிக்க திமிரின் - வெறியின் - அடிப்படையில் எழுந்தது என்பது வெளிப்படையானது.

இந்த நாட்டின் சிறுபான்மையினருக்கு நீதி செய்வதற்காக இணக்கம் காணப்பட்ட எல்லா ஏற்பாடுகளுமே பேரினவாதத்தினால் பின்னர் நிராகரிக்கப்பட்டு, மறுத்துரைக்கப்பட்டு, உதாசீனப்படுத்தப்படும் என்பதற்கு அரசமைப்பில் இருக்கும் 13 ஆவது திருத்த ஏற்பாடுகளையே 37 வருடங்களாக நடைமுறைப்படுத்தாமல் அப்பட்டமாக நிராகரித்து, அந்த அரசமைப்பை மீறும் சிங்கள - பௌத்த பேரினவாத மேலாதிக்க அரசுகளின் போக்கு நிரூபித்து நிற்கின்றது.

அரசமைப்பு மூலம் இணங்கப்பட்ட ஏற்பாடுகள் மாத்திரமல்ல, காலத்துக்கு காலம் தமிழர் தரப்போடு இணக்கம் கண்ட எல்லா ஏற்பாடுகளையுமே பேரினவாத அரசுகள் தொடர்ந்து நிராகரித்து மறுத்து வந்திருக்கின்றன.

அது, பண்டா - செல்வா ஒப்பந்தமாகட்டும், டட்லி - செல்வா ஒப்பந்தமாகட்டும், ஜே.ஆர். - அமிர்தலிங்கம் இணக்கமாக வந்த மாவட்ட சபை விடயமாகட்டும், இலங்கை - இந்தியா ஒப்பந்த மூலம் வந்த ஏற்பாடுகளாகட்டும், ஒஸ்லோ அறிக்கை மூலம் வந்த இணக்கமாகட்டும், எல்லா விடயங்களிலும் இணங்கி, சம்மதித்து, ஒப்புக்கொண்ட அம்சங்களை பின்னர் கைவாங்கி, கிழித்தெறிந்து, தமிழர்களை ஏமாற்றியதுதான் சிங்களத்தின் ஒரே தனித்துவப் பண்பியல்பாக நீடித்து வந்திருக்கின்றது.

இப்போது தமிழர் தாயகத்தின் சுமார் ஆறாயிரம் ஏக்கர் நிலத்தை கபளீகரம் பண்ணுவதற்காக விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை, தமிழர்களின் கடும் எதிர்ப்பை அடுத்து வாபஸ் பெறுவதாக ஊடக அறிவிப்பு மூலம் பரபரப்பாக வெளிப்படுத்திய அதே பௌத்த - சிங்கள பேரினவாத அரசு, இன்னமும் அவ்விடயத்தில் பின்னடிப்புக் காட்டுகின்றது. அந்த வர்த்தமானி அறிவித்தல் அடுத்த 28ஆம் திகதி அதற்குரிய கால அவகாசம் பூர்த்தியாகி, அந்த நிலங்களை அரசு சுவீகரிக்கும் அதிகாரம் உருவாகும் காலம் வரை அந்த வர்த்தமானியை வாபஸ் பெறும் நடவடிக்கையை அரசு முன்னெடுக்க மாட்டாது என்ற போக்கே வெளிப்படுகின்றது.

தான் ஆரவாரம் பண்ணி, வாபஸ் பெறுவதாக கூறிய உறுதி மொழியைக் கூட, வழமை போல அரசு நடைமுறைப்படுத்தாமல் பின் வாங்கி, அதன் மூலம் அந்தக் காணிகளை கபளீகரம் பண்ணும் தன்னுடைய பேரினவாத மேலாதிக்க வெறிப் போக்குடைய ஆக்கிரமிப்பை தொடர போகின்றது என்பதுதான் இவ்விடயத்தை ஒட்டி நேற்று உயர் நீதிமன்றத்தில் அரசு தரப்பு எடுத்த நிலைப்பாடு உறுதிப்படுத்தி நிற்கின்றது.

சிறுபான்மையினருக்கு வாக்குறுதிகளை வழங்குவதும், அதைப் பின்னர் மீறுவதும் பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்க வெறிப்போக்கின் பரவணிப் பண்பியல்பு.அதையே அநுரா அரசும் இப்போது செய்கிறது.




# 38 சர்வதேச விமானங்களை குறைக்க ஏர் இந்தியா முடிவு

வாரத்திற்கு 38 சர்வதேச விமானங்களை குறைக்க முடிவு செய்துள்ள ஏர் இந்தியா நிறுவனம், ஜூன் 21 முதல் ஜூலை 15 வரை 3 வெளிநாட்டு சேவைகளை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

ஜூன் 12 அன்று அகமதாபாத்தில் நடந்த விமான விபத்தைத் தொடர்ந்து ஏர் இந்தியா நிறுவனம் தனது சேவையை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது. அகலம் அதிகமாக உள்ள விமானங்களின் இயக்கத்தை தற்காலிகமாக 15 வீதம் குறைப்பதாக ஏர் இந்தியா நேற்று முன்தினம் அறிவித்தது. மேலும், கடந்த சில நாள்களாக பல்வேறு விமான சேவைகளை பாதுகாப்பு கருதி நிறுத்தி உள்ளது.

இந்நிலையில், ஏர் இந்தியா நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

“வாரத்திற்கு 38 சர்வதேச விமானங்களை குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தக் குறைப்புகள் ஜூன் 21 முதல் அமலுக்கு வரும், குறைந்தது ஜூலை 15 வரை நீடிக்கும்.

மேலும், ஜூன் 21 முதல் ஜூலை 15 வரை 3 வெளிநாட்டு சேவைகளை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, டில்லி – நைரோபி, அமிர்தசரஸ் – லண்டன் (கேட்விக்) மற்றும் கோவா (மோபா) – லண்டன் (கேட்விக்) ஆகிய 3 வழித்தடங்களில் ஏர் இந்தியாவின் விமான சேவை ஜூலை 15 வரை நிறுத்தப்படும்.

டில்லி – நைரோபி வழித்தடத்தில் வாரத்திற்கு நான்கு விமானங்கள் இயக்கப்படுகின்றன. அமிர்தசரஸ் – லண்டன் (கேட்விக்) மற்றும் கோவா (மோபா) – லண்டன் (கேட்விக்) வழித்தடங்களில் வாரத்திற்கு மூன்று விமானங்கள் இயக்கப்படுகின்றன. ஜூலை 15 வரை இந்த வழித்தடங்களில் இந்த விமான சேவை இருக்காது.

மேலும், வட அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா மற்றும் தூர கிழக்கு நாடுகளை இணைக்கும் 18 சர்வதேச வழித்தடங்களில் விமானங்கள் குறைக்கப்படும்.

விமானப் பயணத்திற்கு முந்தைய பாதுகாப்பு சோதனைகளை தானாக முன்வந்து மேற்கொள்வதற்காகவும், மத்திய கிழக்கில் வான்வெளி மூடல்களால் ஏற்படும் கூடுதல் கால அளவுகளைக் கருத்தில் கொண்டும் இந்த குறைப்புகள் ஏற்படுகின்றன.

எங்கள் அட்டவணையில் இந்த தற்காலிகக் குறைப்பு உங்கள் பயணத் திட்டங்களைப் பாதிக்கலாம் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம், சிரமத்திற்கு நாங்கள் மிகவும் வருந்துகிறோம்,” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# மண்டபம் மீனவர் நடுக்கடலில் மாயம்: 2 ஆவது நாளாக தேடும் பணி தீவிரம்

நடுக்கடலில் மாயமான மண்டபம் மீனவரை ஹெலிக்கொப்டர் மற்றும் ரோந்து படகில் தேடும் பணி 2 ஆவது நாளாக நேற்றும் நடைபெற்றது.

இராமேஸ்வரம் அருகே மண்டபம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து சர்புதீன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் அனீஸ் (வயது 30), மாதவன் (வயது 28), ஃபரித் (வயது 28), இப்ராஹிம் சா (வயது 40) ஆகிய 4 பேர் மீன்பிடிக்கச் கடலுக்கு சென்றுள்ளனர். ஜூன் 18 ஆம் திகதி நள்ளிரவில் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது திடீரென சர்புதீனின் படகின் பக்கவாட்டுப் பலகை உடைந்து, விசைப்படகு கடலில் மூழ்கியுள்ளது.

இதனை கண்ட அப்பகுதி அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த சக மீனவர்கள் கடலில் தத்தளித்துக கொண்டிருந்த அனீஸ், மாதவன், ஃபரித் ஆகியோரை பத்திரமாக மீட்டுள்ளனர். இவர்களில் இப்ராஹிம் சா என்ற மீனவர் மாயமதாக தெரிகிறது.

இந்த நிலையில், மாயமான மீனவரை மெரைன் பொலிஸாருக்கு சொந்தமான ரோந்து படகு, இந்திய கடலோர காவல் படை ரோந்து ஹெலிக்கொப்டர் மற்றும் இவர்களுடன் இரண்டு விசைப்படகில், மண்டபம் வடக்கு பகுதி மீனவர்களும் வடக்கு பாக் ஜல சந்தி கடல் பகுதியில் தேடுதல் பணியில் ஈடுபட்டனர்.

இதனிடையே, இரண்டாவது நாளாக நேற்று மாயமான மீனவரை தேடும் பணியில் மீட்புக்குழுவினர் ஈடுபட்டனர்.



# இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தாத வரை அமெரிக்காவுடன் பேச்சு இல்லை

## ஈரான் திட்டவட்டம்

தங்கள் நாட்டின் மீதான தாக்குதல்களை இஸ்ரேல் தொடரும் நிலையில், அமெரிக்காவுடன் எந்தவொரு பேச்சுவார்த்தையும் நடத்த முடியாது என ஈரான் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இது குறித்து ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி நேற்று அந்நாட்டின் அரசு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில்,

"அமெரிக்கர்கள் பேச்சுவார்த்தைகளுக்கு தீவிரமாக அழைப்பு விடுக்கும் செய்திகளை பலமுறை அனுப்பி வருகின்றனர். ஆனால், இஸ்ரேலின் ஆக்கிரமிப்புப் போர் நிற்காத வரை, இராஜதந்திரம் மற்றும் உரையாடலுக்கு இடமில்லை என்பதை நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம். இஸ்ரேலுக்கு எதிரான நமது எதிர்வினைக்குப் பிறகு, இதுபோன்ற நாடுகள் ஆக்கிரமிப்பில் இருந்து தங்களை தூர விலக்கிக் கொள்ளும் என்று நான் நினைக்கிறேன்." என்று கூறினார்.

இஸ்ரேல் – ஈரான் இடையிலான போர் 8 ஆவது நாளை எட்டியுள்ளது. இந்த நிலையில், ஈரானின் அணுசக்தித் திட்டம் விவகாரத்தில் மோதலைத் தணிக்க முயலும் பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சந்திப்பதற்காக ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவுக்கு வந்துள்ளார். கடந்த வாரம் ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்களைத் தொடங்கியபோது திட்டமிடப்பட்ட சந்திப்பு இதுவாகும்.

ஜெனீவாவில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற இங்கிலாந்து வெளியுறவு செயலாளர் டேவிட் லாமி, வியாழக்கிழமை வொஷிங்டனில் மூத்த அமெரிக்க அதிகாரிகளைச் சந்தித்த பிறகு, "அடுத்த இரண்டு வாரங்களுக்குள் ஒரு இராஜதந்திர தீர்வை எட்டுவதற்கான ஒரு நம்பிக்கை இப்போது உள்ளது." என்று கூறினார்.

இதனிடையே, அடுத்த இரண்டு வாரங்களில் இஸ்ரேல் – ஈரான் மோதலில் அமெரிக்கா ஈடுபடுமா என்பது குறித்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவெடுப்பார் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களை சந்தித்த ஊடகப் பிரிவு செயலாளர் கரோலின் லீவிட்,

"எதிர்காலத்தில் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தலாமா, வேண்டாமா என்ற விவகாரத்தில் கணிசமான வாய்ப்பு உள்ளது என்ற உண்மையின் அடிப்படையில், அடுத்த இரண்டு வாரங்களுக்குள் இந்தப் பிரச்சினைக்குள் செல்லலாமா வேண்டாமா என்பதை நான் முடிவெடுப்பேன் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# ஈரானுக்கு நாங்கள் முழுமையான தார்மிக ஆதரவை வழங்குகிறோம்

## பாகிஸ்தான் தெரிவிப்பு

ஈரானுக்கு நாங்கள் முழு தார்மிக ஆதரவை வழங்குகிறோம். ஆனால் இதுவரை எங்களிடம் ஈரான் எந்த வகையான ராணுவ உதவியையும் கேட்கவில்லை என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் வெளியுறவு அலுவலக செய்தித் தொடர்பாளர் ஷஃப்கத் அலி கான் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில்,

"ஈரான் குறித்த பாகிஸ்தானின் நிலைப்பாடு தெளிவானது மற்றும் வெளிப்படையானது. ஈரானுக்கு நாங்கள் முழு தார்மிக ஆதரவை வழங்குகிறோம் ஈரானுக்கு எதிரான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை நாங்கள் கடுமையாக கண்டிக்கிறோம். ஈரான் எல்லையில் உள்ள அகதிகளுக்கு பாகிஸ்தானில் தஞ்சம் வழங்க தெஹ்ரானிடமிருந்து எந்த கோரிக்கையும் வரவில்லை. அதுபோல இதுவரை ஈரான் எங்களிடம் எந்த வகையான இராணுவ உதவியையும் கேட்கவில்லை.

ஐ.நா. சாசனத்தின் கீழ் தன்னைத் தற்காத்துக் கொள்ள ஈரானுக்கு உரிமை உண்டு. 21 முஸ்லிம் நாடுகள் ஈரானுக்கு எதிரான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை கண்டித்துள்ளன. இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் சர்வதேச சட்டம் மற்றும் ஐ.நா. சாசனத்துக்கு எதிரானவை. ஈரானில் நிலவும் சூழ்நிலை பாகிஸ்தானுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இஸ்ரேல் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். ஈரானிய அணுசக்தி நிலையங்களை இஸ்ரேல் குறிவைப்பது சர்வதேச அணுசக்தி முகமையின்



பாதுகாப்புகள் மற்றும் பிற சர்வதேச சட்டங்களை மீறுவதாகும்.

ஈரான் – இஸ்ரேல் மோதலுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண பாகிஸ்தான் ஆதரவளித்தது. துணைப் பிரதமர் இஷாக் டார் ஈரான், துருக்கி, எகிப்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ஐக்கிய அரபு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ஈரானுக்கு எதிரான இஸ்ரேலிய நடவடிக்கைகள் பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை எடுத்துரைத்தார்.

தெஹ்ரானில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் மற்றும் மஷாத், ஜஹேதானில் உள்ள தூதரகங்கள் பாகிஸ்தான் நாட்டினரை ஈரானில் இருந்து வெளியேற்றுவதில் உதவி வருகிறது. இதுவரை 3,000 பாகிஸ்தானியர்கள் திரும்ப அழைத்து வரப்பட்டுள்ளனர்." என்று தெரிவித்துள்ளார்.







# ஜனாதிபதி மாளிகையினை பார்வையிட்ட மாணவர்கள்

அநுராதபுரம், தம்புத்தேகம மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் குழு ஒன்று, வருடாந்த கல்விச் சுற்றுலாவின் போது ஜனாதிபதி செயலகம் மற்றும் ஜனாதிபதி மாளிகையை பார்வையிடுவதற்காக நேற்று வெள்ளிக்கிழமை சென்றனர்.

ஜனாதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு மற்றும் இலங்கை நாடாளுமன்றத்தின் தொடர்பாடல் பிரிவுடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக செயல்படுத்தும் 'Vision' நிகழ்ச்சியில் பங்கேற்க இந்த மாணவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

ஜனாதிபதி அலுவலகத்தின் பழைய நாடாளுமன்ற வளாகத்தை பார்வையிட்ட பின்னர் அதன் வரலாறு குறித்து மாணவர்களுக்கு தெளிவூட்டப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் எண்ணக்கருவிற்கு அமைவாக செயல்படுத்தப்படும் Clean Sri Lanka வேலைத்திட்டம், நிறைவேற்று அதிகாரத்தின் பணிகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி தொடர்பில் இந்த பாடசாலையின் ஆசிரியர் குழாம் மற்றும் மாணவர்களுக்கு இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி சட்ட ஆலோசகர் ஜே.எம். விஜேபண்டார, சுற்றாடலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் வகையில், பாடசாலைக்கு பெறுமதியான மரக்கன்று ஒன்றையும் வழங்கிவைத்தார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் கே.எம்.என்.குமாரசிங்க, முப்படை பாதுகாப்பு ஒருங்கிணைப்பு பிரிவின் பிரதிப் பணிப்பாளர் கேணல் தனஞ்சய செனரத், தம்புத்தேகம மத்திய கல்லூரியின் உப அதிபர் எம். ஜீ. அசங்க விஜேசூரிய மற்றும் ஆசிரியர்கள் குழு உள்ளிட்ட பலர் இந்த சந்தர்ப்பத்தில் கலந்து கொண்டனர்.









# மண் வெட்டியால் தாக்கப்பட்ட குடும்பஸ்தர் உயிரிழப்பு

(எஸ். ரகுதீஸ்)

அனிச்சங்குளம் பகுதியில் உணவருந்தி கொண்டிருந்தபோது மண் வெட்டியால் தாக்கப்பட்ட சம்பவத்தில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் செல்வபுரம் வடக்கு, வவுனிக் குளத்தைச் சேர்ந்த கதிரவேற்பிள்ளை கண்ணதாசன் (வயது 56) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

அனிச்சம் குளத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் காவலாளியாக உள்ள மேற்படி நபர் கடந்த மாதம் 10 ஆம் திகதி மூன்று பேருக்கு உணவெடுத்துக் கொண்டு சென்று அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மூவரும் உணவருந்தியுள்ளனர்.

இதன்போது ஏற்பட்ட கருத்து முரண்பாட்டில் மூவரில் ஒருவர் மண் வெட்டியால் மேற்படி நபரை தாக்கியுள்ளார். இதில் அவர் படுகாயமடைந்தார். இதனை



அடுத்து தாக்கிய நபர் நெட்டங்கண்டால் பொலிஸில் சரணடைந்தார். மற்றையவர் ஓடி ஒழிந்துள்ளார்.

இதில்படுகாயம்அடைந்தவர்மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு இருந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை நெட்டாங்கண்டல் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# கெஹலியவின் மற்றைய மகளும் நேற்றுப் பிணையில் விடுவிப்பு!




பிணை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியதால் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மற்றைய மகளும் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று வெள்ளிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

134 மில்லியன் ரூபாவுக்கும் அதிக மதிப்புள்ள சொத்து விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக கெஹலிய ரம்புக்வெலவின் இரு மகள்களும் மருமகனும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்னிலையாகிய போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவர்களைப் பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதன்போது கெஹலிய ரம்புக்வெலவின் ஒரு மகளும், மருமகனும் பிணை நிபந்தனைகளை நிறைவேற்றிய நிலையில் மற்றைய மகள் பிணை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியிருந்தார்.

இதனால் கெஹலிய ரம்புக்வெலவின் மற்றைய மகள் சிறைச்சாலை அதிகாரிகளால் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கெஹலிய ரம்புக்வெலவின் மற்றைய மகள் பிணை நிபந்தனைகளை முழுமையாக நிறைவேற்றியதால், நீதிமன்ற உத்தரவின் கீழ் நேற்று வெள்ளிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.




# யாழ். மாவட்டத்தின் நிலத்தடி நீரை மேம்படுத்துவது பற்றிய கருத்தமர்வு

யாழ் மாவட்டத்தின் நிலத்தடி நீரை மேம்படுத்தும் முகமாக விசேட விழிப்புணர்வு கருத்தமர்வு நேற்றுக் காலை யாழ் திருநெல்வேலியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் முன்னெடுக்கப்பட்டது.

பிரித்தானிய அரசாங்கத்தின் சர்வதேச அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நீர் மேலாண்மை தொடர்பாக பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இந்த நிகழ்ச்சி திட்டத்தின் பங்குதாரர்களான சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம்,யாழ் பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் பேராசிரியர்கள், துறைசார் திணைக்கள அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் திட்டத்தின் பங்குதாரர்களுக்கான விசேட கருத்தமர்வு முன்னெடுக்கப்பட்டது.

இதன் பொழுது பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பட்றிக் விசேட அதிதியாக கலந்து உரை ஆற்றினார்.

நிகழ்வில் மாணவர்களிடையே நன்னீர் விழிப்புணர்வை மேம்படுத்துவது தொடர்பில் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டி மற்றும் வினா விடை போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.



# ஹியூமன் இம்யூனோ குளோபுலின் மருந்தில் தீங்கு விளைவிக்கும் கொடிய பக்டீரியா நீர்

முன்னாள்சுகாதாரஅமைச்சர்கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நோய் எதிர்ப்பு மருந்தான ஹியூமன் இம்யூனோ குளோபுலின் மருந்தில் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் கொடிய பக்டீரியா நீர் இருந்தமை நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெளிக்கொணரப்பட்டது.

இந்த மருந்து தொடர்பில் நடத்தப்பட்ட சர்வதேச விசாரணையின் முடிவுகளை பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம நீதிமன்றத்திற்கு தெரிவித்த போது இது தெரியவந்தது.

தரமற்ற மருந்துகள் என அடையாளம் காணப்பட்ட ஹியூமன் இம்யூனோ குளோபுலின் மற்றும் ரிட்டோப்சி மெப் மருந்துகள், உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஜேர்மன் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு பரிசோதிக்கப்பட்டுள்ளன.

பரிசோதனை அறிக்கைக்கு அமைய ஹியூமன் இம்யூனோ குளோபுலின் மருந்தில் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் கொடிய பக்டீரியா நீர் மட்டுமே உள்ளது என்பதும், புற்றுநோய் எதிர்ப்பு மருந்தான ரிட்டோப்சி மெப் மருந்தில் உப்பு நீர் மட்டுமே உள்ளது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம மாளிகா




கந்த நீதவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

முதலாவது சந்தேகநபர் இந்த மருந்தை உற்பத்தி செய்வதற்காக இந்தியாவிலிருந்து மூலப்பொருள்களை இறக்குமதி செய்தனரா என மாளிகா கந்த நீதவான் லோச்சனா அபேவிக்ரம இதன்போது வினவியதுடன் அதற்கு பதிலளித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் முதலாவது சந்தேகநபரால் மருந்து உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து மூலப்பொருட்களும் சுங்கத் துறை அதிகாரிகளின் உதவியுடன் சுங்க வகைப்பாடு எண்ணின் கீழ் சரிபார்க்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அமைச்சரவை பத்திரத்தின் மூலம் பெறப்பட்ட அமைச்சரவை அங்கீகாரம் மூலம் இந்த மருந்துங்கள் அவசரமாக கொள்வனவு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இது தொடர்பாக அண்மையில் வாக்குமூலம் பெற்றதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

இந்த விவகாரத்திற்குப் பொறுப்பான அமைச்சர் சம்பந்தப்பட்ட பத்திரத்திற்கு முழுப் பொறுப்பு என முன்னாள் ஜனாதிபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம கூறினார்.

முதலாவது சந்தேக நபருக்கும் மற்றைய சந்தேக நபர்களுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல்கள் தொடர்பான அறிக்கையையும் விசாரணை அதிகாரிகள் தயாரித்துள்ளனர் எனவும் இது அவர்களுக்கிடையிலான தொடர்பை தெளிவுபடுத்துகிறது எனவும் அவர் நீதிமன்றத்திற்கு தெரிவித்தார்.

தரமற்ற மருந்து கொடுக்கல் வாங்கல் தொடர்பாக நிரந்தர 3 நீதிபதிகளைக் கொண்ட மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதவான் நீதிமன்றத்திற்குத் குறிப்பிட்டார்.



# முல்லைத்தீவில் மாயமான மீனவரை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை

## படகில் இரத்தக் கறை; ஒரு பகுதி வலைகள் சிக்கின







(பா.சதீசன்)

முல்லைத்தீவு தீர்த்தக்கரை கடலில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் மாயமாகிய நிலையில் மீனவரை இரண்டாவது நாளாக தேடும் பணியில் ஒரு தொகுதி வலைகள் மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை முல்லைத்தீவு கள்ளப்பாடு தீர்த்தக்கரைப் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்றவேளை மீனவ படகு ஒன்று நடு கடலில் படகு தனியாக யாருமற்ற நிலையில் மிதந்து வந்துள்ளது. இந்நிலையில் படகில் அதில் தொழிலுக்குச் சென்ற நபரின் சறம் காணப்பட்டுள்ளது. அத்துடன் இரத்தக் கறையும் காணப்பட்டுள்ளது.

அதனையடுத்து தொழிலுக்கு சென்ற மீனவரின் உறவினர்களால் முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்த மீனவரைத் தேடும் பணியில் 8 படகுகளில் மற்றைய மீனவர்கள் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்த போதிலும் காணாமல் போன மீனவர் தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை.

இந்நிலையில் நேற்று அதிகாலை மீனவர்கள் 30 ற்கு ன மேற்பட்ட படகுகளில் பிற்பகல் 2.30 மட்டும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இத்தேடுதல் நடவடிக்கையில் காணாமல் போன மீனவரின் ஒரு தொகுதி வலை மீட்கப்பட்டிருந்தது.

படகில் காணப்பட்ட இரத்தக்கறையைத் தடயவியல் பொலிஸார் பரிசோதனை செய்து அது மனித இரத்தம் என உறுதிப்படுத்தி உள்ளனர் என்ச்க் காணாமல் போன மீனவரின் சகோதரன் ஊடகங்களுக்கு கூறியிருந்தமையும் குறிப்பிடதக்கது.



# வாகரையைப் பிள்ளயானின் கட்சிப் பிரமுகர் தேசிய மக்கள் சக்தி ஆதரவுடன் வென்றார்!

## ஆனால் பிரதித் தவிசாளர் பதவி தமிழரசுக்கு






**(கனகராசா சரவணன்)**

ஷமட்டக்களப்பு, கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேச சபை தவிசாளராக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கதிர்காமத்தம்பி தெய்வேந்திரன், தேசிய மக்கள் சக்தியின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கு மேலதிகமாக ஒரு வாக்கை அளித்தவர் தமிழரசுக் கட்சி உறுப்பினரா, அல்லது சிறிலங்கா முஸ்லிம் காங்கரஸ் கட்சி உறுப்பினரா, ஆதரவு வழங்கிய கறுப்பு ஆடு யார்? என அரசியல் கட்சிகளுக்குள்ளே கறுப்பாடு தொடர்பாக சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

வாகரை பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர்களை தெரிவு செய்யும் அமர்வு நேற்று வெள்ளிக் கிழமை பிரதேச சபை மண்டபத்தில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் இலங்கை தமிழரசு கட்சியைச் சேர்ந்த பல்கோஸ் மோகனராசா மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த கதிர் காமத்தம்பி தெய்வேந்திரன் ஆகியோர் போட்டியிட்டனர்.

இதனையடுத்து தவிசாளர் தெரிவு செய்ய உள்ளூராட்சி ஆணையாளர் கோரியபோது திறந்த வாக்கெடுப்பு நடத்துவதற்கு தமிழரசு கட்சியின் 6 உறுப்பினர்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் 2 பேர் என 8 உறுப்பினர்கள் கோரினர். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 7 உறுப்பினர்களும் தேசிய மக்கள் கட்சி 3 உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சத்தியின் ஓர் உறுப்பினர் என 11 உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்புக்கு வாக்களித்தனர்.

இதனை தொடர்ந்து தவிசாளரை தெரிவு செய்ய இரகசிய வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இதில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி தெய்வேந்திரன் 12 வாக்குகளை பெற்றார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பல்கோஸ் மோகன ராசா 7 வாக்குகளை பெற்றார். கதிர் காமத்தம்பி தெய்வேந்திரன் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

அதனையடுத்து பிரதித்தவிசாளருக்கு தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த சண்முகநாதன் ரசிகரன், ஐக்கிய மக்கள் சத்திய சேர்ந்த கட்சியைச் சேர்ந்த மொஹமட் புகாரி மொஹமெட் ஹைதர் போட்டியிட்டனர். இதில் சன்முக நாதன் ரசிகரனுக்கு 10 வாக்குகளும், மொஹமெட் ஹைதர் அவர்களுக்கு ஆதரவாக 8 வாக்குகளும் கிடைத்தன. ஓர் உறுப்பினர் வாக்களிப்பதை நிராகரித்த நிலையில், தமிழரசுக் கட்சி சண்முகநாதன் ரசிகரன் பிரதி தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிலையில் தவிசாளராக போட்டியிட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினருக்கு அவரது கட்சியின் 7 பேருடன், தேசிய மக்கள் சக்தியின் 3 உறுப்பினரும் மற்றும் ஐக்கிய மக்கள் சத்தி உறுப்பினர் ஒருவர் உட்பட 11 பேர் ஆதரவு வழங்கியுள்ள நிலையில், அவர் 12 வாக்குகளைப் பெற்றுள்ளார். எனவே மேலதிகமாக அந்த ஒரு வாக்கை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு ஆதரவாக அளித்தவர் தமிழரசுக் கட்சி உறுப்பினரா, அல்லது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினரா, யார் அந்த கறுப்பு ஆடு? எந்த கட்சி உறுப்பினர் ? என்பது அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் குழப்பகரமாக உள்ளமை குறிப்பிடதக்கது.



# குருநாகல் நுகவெல சந்தியில் நேற்று மாலை கார் விபத்தில் சிக்கியதில் நால்வருக்கு காயம்

(உடப்பு க.மகாதேவன்)

குருநாகல் ஹெட்டிபொல, நுக வெல சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு பேர் காயமடைந்து குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர் ஹெட்டிபொல பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் பயணித்த கார் கட்டுப் பாட்டை இழந்து அருகிலுள்ள சுவர் மீது மோதியதின் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின் றது.

மேலதிக விசாரணைகள் தொடர் கின்றன.

# வவுனியா விபுலானந்தாவுக்கு அதிபர் நியமனம்




(கி.வசந்தன்)

வவுனியாவின் முன்னனிப் பாட சாலைகளில் ஒன்றான விபுலானந் தாக் கல்லூரிக்கு நிரந்தர அதிபர் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

அங்கு இதுவரைப் பதில் அதிபர் பொறுப்பை வகித்தவருக்கே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா, விபுலானந்தா கல்லூ ரியில் பதில் அதிபராக கடமையாற்றி வந்த திருமதி மோகனதாஸ் ஞான மதி, முன்னர் கல்லூரியின் அதி பராக கடமையாற்றிய சிவநாதன் ஓய்வு பெற்ற 29.09.2023 தொடக்கம் தற்போது வரை பதில் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார்.

அன்று தொடக்கம் இன்று வரை பாடசாலையில் எந்தவொரு விடயத் திலும் வீழ்ச்சி நிலை அவதானிக்கப் படவில்லை என்பதுடன், அவரது கட மைக் காலத்தில் பாடசாலையின் தினசரி செயற்பாடுகள் கட்டுக்கோப் புடன் நடைபெற்று வருவதனையும், பொதுப்பரீட்சைப் பெறுபேறுகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதுடன் ஏனைய இணைபாடவிதான செயற்பாடு களிலும் கடந்த பல ஆண்டுகளை விட பல வெற்றிகள் பெறப்பட்டுள்ள நிலையில் அந்தப் பதில் அதிப ரையே நிரந்தர அதிபராக நியமிக்கு மாறு பல்வேறு தரப்பினராலும் கோரிக் கைகள் முன்வைக்கப்பட்டன.

சுமார் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலைக்கான அதிபர் நியமனம் தொடர்பில் இரண்டு நேர்முகத் தேர்வு கள் இடம்பெற்றிருந்தன. நேர்முகத் தேர்வில் பதில் அதிபரும் கலந்து கொண்ட போதும் இதுவரை எவரும் நிரந்தர அதிபராக நியமிக்கப்படாமல் இருந்த நிலையிலேயே தற்போது நிரந்தர அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்லூரியின் பதில் அதிபராக செயற் பட்ட திருமதி மோகனதாஸ் ஞான மதியே நிரந்தர அதிபராக வட மாகாண கல்வி அமைச்சால் நிய மிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிரந்தர நியமனத்திற் காக உழைத்த வன்னி நாடாளு மன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், வடக்கு ஆளுநர், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பா ளர், பாடசாலை பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்தி சங்கம் என்பவற்றுக்கு பாடசாலை சமூகம் நன்றியையும் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 21.06.2025

## மேஷம்

வாழ்வில் முன்னேறுவதற்கு உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். பொறுமை மற்றும் அமைதி மேற்கொண்டால் எல்லாம் சரியாகி விடும். இன்று சமாளிப்பதில் சற்று சிரமம் காணப்படும்.

பிறருடன் பழகும் போது பொறுமை அவசியம். அமைதியுடன் நடந்து கொண்டால் அவர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணை விரும்பும் வகையில் நடந்து கொள்வீர்கள்.ஒருவருக்கொருவர் அனுசரனையாக நடந்து கொண்டால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இல்லாவிடினும் கவலை வேண்டாம். எதிரபாராத பண வரவைக் கொண்டு உங்கள் செலவை சமாளிப்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்துக்காக சிறிது பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

## ரிஷபம்

உங்களிடம் காணப்படும் ஆர்வம் காரணமாக நீங்கள் இன்று செயல்களை விரைந்து முடிப்பீர்கள். இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் நீண்ட காலப் பயன் தருவனவாக இருக்கும்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.உங்களிடம் சிறப்பு தகுதி காணப்படும் அதனை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் இருவரும் மகிழ்வுடன் காணப்படுவீர்கள். உங்களின் உறவு சிறப்பாக இருக்கும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். இதனால் மகிழ்ச்சி ஏற்படும்.

இன்று ஆற்றலும் உற்சாகமும் நிறைந்து காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று பலன்கள் கலந்து காணப்படும். அமைதியாக இருந்தால் கவனமாக செயலாற்றலாம். மகிழ்ச்சிக்கான மந்திரம் இதுவே.

உங்கள் பணிகளை முன்னுரிமைப் படுத்தி நன்கு திட்டமிட வேண்டும். இன்று பணிகள் சிறிது அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். செலவும் காணப்படும் என்றாலும் அது பயனுள்ளதாக இருக்கும்.

இன்று நீங்கள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும். தேவையின்றி பதற்றப்பட வேண்டாம். அது உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.

## கடகம்

நம்பிக்கையுடனும் அமைதியுடனும் இருக்க வேண்டும்.இதனால் எல்லாவிதமான பிரச்சினைகளையும் சமாளிக்கலாம். உங்கள் மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணிகள் அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள். பணிகளை முன்னுரிமைப் படுத்தி அதன்படி ஆற்றுங்கள். இன்று நேரத்தோடு செயல்பட வேண்டியது அவசியம்.

நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கம் மேம்படும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக செலவு செய்ய நேரும். என்றாலும் உங்கள் தேவைகளை சமாளிக்கும் வகையில் உங்கள் பணப்புழக்கம் காணப்படும்.

## சிம்மம்

நேர்மறை எண்ணம் மற்றும் நட்பான அணுகுமுறையை மேற்கொள்ளுங்கள். இதனால் வெற்றியும் நன்மதிப்பும் கிடைக்கும். எதிர்மறை எண்ணத்தை தவிர்த்திடுங்கள்.

உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டும். கவனமின்றி செயல்பட்டால் பணியும் தரம் குறையும். அதன் விளைவாக உங்கள் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையின் அனுசரணை கிடைப்பது இயலாது என்பதனால் நீங்கள் இன்று உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். யதார்த்தமான உங்கள் அணுகுமுறை உங்கள் துணையை உங்கள் பக்கம் ஈர்க்கும்.

நிதிநிலைமை சற்று மந்தமாக இருக்கும். உங்கள் செலவுகளை குறைக்க வேண்டும். இதன் மூலம் நிதியின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த முடியும்.

## கன்னி

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். பயனுள்ள செயல்களுக்கு அதனை பயன்படுத்துங்கள்.இன்று சௌகரியமாக இருப்பீர்கள்.

உங்கள் பணி இன்று தரமானதாக இருக்கும். உங்களிடம் மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்பட்டு அனைவரின் பாராட்டையும் பெறும்.

சிறந்த தகவல் தொடர்பால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார். உங்கள் இருவருக்குமிடையே மகிழ்ச்சியான இனிமையான தருணங்கள் காணப்படும்.

இன்று கடன்கள் பெற்று உங்கள் பணத் தேவைகளை சமாளிப்பீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று திடமான ஸ்திரமான ஆரோக்கியம் காணப்படும்.

## துலாம்

இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் பேச்சில் தெளிவு காணப்படும். உங்கள் பேச்சாற்றல் மூலம் சாதிப்பீர்கள்.

உங்களைச் சுற்றி காணப்படும் குழப்பம் காரணமாக பணியில் கவனம் செலுத்த இயலாது. சகபணியாளர்களுடன் பொறுமையாக பழக வேண்டும். பணியை குறித்தநேரத்தில் முடிப்பதற்கு முன்னுரிமை அளியுங்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவால் உங்கள் துணை மகிழ்ச்சியடைவார்.

நிதிநிலைமையை சமாளிப்பது இன்று கடினமாக இருக்கும். செலவுகளை நிர்வகிக்க தெரிந்துகொண்டு அதிகம் செலவழிக்காமல் இருக்க வேண்டும்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காக பணம் செலவு செய்ய நேரும்.

## விருச்சிகம்

இன்று சிறப்பாக யோசித்து செயல்பட வேண்டியது அவசியம். தேவையற்ற எண்ணங்களை மனதில் கொள்ளாதீர்கள்.

பணியிடத்தில் இன்று கூடுதல் பொறுப்புகள் காணப்படும். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்வதன் மூலம் அமைதி காணலாம்.

இன்று காதலில் அனைத்தும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணை உங்களிடம் புரிந்துணர்வுடன் இருப்பார். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்காது. என்றாலும் உங்களிடம் இருக்கும் பணத்தைக் கொண்டு இன்றைய தினத்தை சமாளிக்கலாம்.

உணர்ச்சிவசப்படுதலும் பாதுகாப்பற்ற உணர்வும் தவிர்க்க வேண்டும். அது உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.06.2025




ஆரம்பத்தில் சில தடைகள் காணப் படும். உங்களின் தைரியத்தைக் கொண்டு சமாளிப்பீர்கள். கடின உழைப்பும் அர்ப் பணிப்பும் அவசியம். நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

இன்று கவனமாக பணியாற்ற வேண்டும். தேவையற்ற சஞ்சலங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். சிறப்பாக செயலாற்றுங்கள்.

தன்னுடைய விருப்பப்படி நீங்கள் நடக்க வேண்டும் என்று உங்கள் துணையின் எதிர்ப்பார்ப்பு காணப்படும். அதற்கு முயன்றால் உறவின் பிணைப்பு வலுப்படும்.

இன்று அதிக பணம் காணப்படாது. உங்களிடம் இருக்கும் பணம் தேவையை விட அதிகமாக இருக்கும்.

இன்று முன்னெச்சரிக்கையாக உங்கள் கண்களுக் கும் பல்லிற்கும் சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.




இன்று நீங்கள் விரைந்து செயலாற்று வீர்கள். இதனால் பதட்டம் காணப்பட்டா லும் உங்களிடம் மகிழ்ச்சியும் காணப் படும். விருப்பமான வெளியிடங்களுக்கு செல்வது ஆறுதலைத் தரும்.

நம்பிக்கையுடன் செயல்பட்டால் எந்த சவால்களையும் எதிர் கொள்ளும் மன நிலை உருவா கும். அது வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் துணையின் உதவியுடன் விரைந்து முடி வெடுக்க விரும்புவீர்கள். நல்ல தொடர்பு காணப்படும். முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். பூர்வீகச் சொத்து அல்லது எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இசை கேட்டல் மற்றும் பிரார்த்தனை நல்ல மனநிலையை அளிக்கும்.




இன்று அனைத்தும் சிறப்பாக நடக் கும். வாழ்வில் உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பாராத விதமாக இன்று உங்களுக்கு பண வரவு அதிக மாக இருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். ஊக்கத்தொகை கிடைக்க வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையேயான பிணைப்பு முன்பிருந்ததை விட இப்பொழுது அதிகமாக இருக்கும்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக காணப்படும். உங்களின் பணம் சம்பாதிக்கும் திறன் இன்று அதி கரித்தும் பக்குவப்பட்ட நிலையிலும் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் முன்னேற்றத்துக்காக பாடுபடுவீர்கள். இது வெற்றியை அளிக்கும். பிரார்த் தனை மூலம் மன அமைதி பெறுவீர்கள்.

இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும். பணியில் கவனம் செலுத்தி னால் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் உறவின் தரத்தை மேம்படுத்த முயற்சி செய்ய வேண்டும். வேறுபாடுகளைக் களைந்து புரிந்துணர்வுடன் செயல்பட்டால் நல்லுறவை ஏற்படுத்த முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். குறை வாக செல்வழிக்க வேண்டும். சேமிப்பை அதிகரிக்க வேண்டும்.

குளிர்ச்சியான உணவு வகைகள் காரணமாக ஒவ்வாமை ஏற்படும் என்பதால் உணவு மற்றும் நீரில் கவனம் தேவை.



# தெதுருஓயாவில் மரம் வீதியில் வீழ்ந்ததில் இரண்டு ஓட்டோக்களுக்குச் கடும் சேதம்

**(உடப்பு க.மகாதேவன்)**

சிலாபம் – கொழும்பு பிரதான வீதி யில் தெதுருஓயா அருகில் மரம் ஒன்று நேற்று வீதியில் முறிந்து விழுந் துள் ளமையால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மரம் முறிந்து விழுந்த தில் அருகில் இருந்த இரண்டு ஓட் டோக்களுக்குச் சேதம் ஏற்பட்டுள் ளது.